

கழக தொண்டர் அணி மாநிலச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் இல்ல விழாவில் கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., ஈரோடு இறைவன், டாக்டர் நா.சந்திரபாபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# ‘அன்னம் தரும் அமுதகரம்’ 184 வது நாள்!

## வில்லிவாக்கம் கிழக்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, ஆக.23-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 184 வது நாள் வில்லிவாக்கம் கிழக்கு பகுதி - இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி உணவு வழங்கப்பட்டது.





தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 184 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (22.08.2025), வில்லிவாக்கம் கிழக்கு பகுதி: 1) வட்டம் 96, தாகூர் நகர் 1வது தெரு, வட்ட செயலாளர் எ.வேதா. 2) வட்டம் 98ஆ, K.H.ரோடு, பாலவாயல் சாலை சந்திப்பு, வட்ட செயலாளர் காஞ்சி செ.துரை, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சட்ட மன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், வே.வாசு, கூ. பீ.ஜெயின், லதா வாசு எம்.சி, டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், வில்லிவாக்கம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எ.வேதா, சீ.விக்னேஷ், ச.மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, சிட்கோ சேகர், ஆர்.தீனதயான், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி (எ) உமாசங்கர், சொ.முருகேசன், ப.லோகு பாபு, கே.எஸ்.பாபு. இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. தொண்டர் அணி மாநிலச் செயலாளர்

# மாஸ்டர் பெ. சேகர் இல்ல நிகழ்ச்சி!

### அன்பகம் கலை – நே.சிற்றரசு – டி.கே.எஸ். இளங்கோவன் – திருத்தணி எஸ். சந்திரன் வாழ்த்து!

சென்னை, ஆக.23

தி.மு.க. தொண்டர் அணி, மாநிலச் செயலாளரும், “தேக்வாண்டோ டுடே” மாத இதழின் ஆசிரியருமான மாஸ்டர் பெ. சேகர் கீதா ஆகியோரின் மகள் வழிப் பெயர்த்தியும் எஸ். ரேவதி அவர்தம் கணவர் ச. சதீஸ்குமார் ஆகியோரின் குழந்தையுமான “ச.ரே. கவிநிலா”வுக்கு முதலாம் பிறந்த நாள் விழா 19.08. 2025 அன்று ஸ்வாகத் ஹோட்டல், அன்னபூர்ணா பார்ட்டி ஹால், இராயப்பேட்டை, சென்னை 600 014 இல் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே. சிற்றரசு, கழகச் செய்தி தொடர்புச் செயலாளர் டி.கே.எஸ். இளங்கோவன், திருத்தணி எஸ். சந்திரன், எம்.எல்.ஏ., தலைமை இலக்கிய அணிச் செயலாளர் வி.பி. கலைராஜன், மாநிலத் தொண்டர் அணித் தலைவர் ஜி. சுகுமாரன், தலைமை இலக்கிய அணிப் பொருளாளர் டாக்டர் நா. சந்திரபாபு, தலைமை இலக்கிய அணித் துணைச் செயலாளர் ஈரோடு இறைவன், சென்னை தென்மேற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் மாம்பலம் ஆ. சந்திரசேகர், சென்னை மேற்கு மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர் மு. செந்தில்குமார், சென்னைத் தென்மேற்கு மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர் ம. ஆனந்தன், சென்னை வடக்கு மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர் கே. கலையரசன்,

சென்னை வடக் கிழக்கு மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர் இரா. மோகனசுந்தரம், கோவை வடக்கு மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர் ம. கணேஷ், இராணிப் பேட்டை, மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர் எம்.கே. சிவராம் குமார், திருவள்ளூர் நகரக் கழகச் செயலாளர் சி.சு. ரவிச்சந்திரன், திருவாலங்காடு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ். மகாலிங்கம், தொல்காப்பியர் தமிழ் சங்கத் தலைவர் மூத்த புலவர் வெற்றியழகன், கவிஞர் காவனூர் வேலன், தமிழ்நாடு திரைப்பட பாடல் ஆசிரியர்கள் சங்க நிறுவனத் தலைவர் தமிழமுதன்,

திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் திருத்தணி ம. கிரண், துணை அமைப்பாளர்கள் ம. புவநேஷ்குமார், தா. மோதிலால், தேக்வாண்டோ இருபாலின மாணவர்கள் உள்ளிட்ட கழக நிருவாகிகள் குழந்தையை வாழ்த்தினார்கள்.

# கழகத் தலைவருக்கு - கன்னியாகுமரி மேற்கு மாவட்ட அயலக அணி நன்றி அறிவிப்பு !

## மாவட்ட அமைப்பாளர் பாலூர் தேவா அறிக்கை!

கன்னியாகுமரி, ஆக. 23-

கன்னியாகுமரி மேற்கு அயலக அணி அமைப்பாளர் பாலூர் தேவா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வெளிநாடு வாழ் தமிழர்களுக்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் அயலக அணியை அமைத்து அத்தோடு தமிழ்நாடு அரசு சார்பில் அயலகத் தமிழர் நல வாரியம் அமைத்து அயலகத்தில் வாழும் தமிழர்களையும் கருணையோடு பாதுகாத்து வரும் எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அயலக அணியை மேலும் வலுப்படுத்தும் விதமாக இன்று மாவட்டத்தில் அமைந்துள்ள ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் பெயர்களை அறிவிக்கச் செய்து எங்கள் நெஞ்சங்களில் மகிழ்ச்சி வெள்ளத்தைப் பெருகச் செய்து கழகப் பணியை மேலும் வலிமையோடு செய்வதற்கு உத்வேகம் தந்ததற்காகக் கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி. தலைவரின் வழியில் உறுதுணையாக நிற்க எங்களை உற்சாகப்படுத்தும் தமிழ்நாட்டின் துணை முதல்வரும் கழகத்தின் இளைஞரணிச் செயலாளருமான சின்னவர் உதயநிதியார் அவர்களுக்கும் நன்றி. மாவட்டத்தின் அனைத்து பகுதி அமைப்பாளர்களைப் பரிந்துரைத்து வழிகாட்டும் தமிழ்நாடு பால்வளத்துறை அமைச்சரும் கன்னியாகுமரி மேற்கு மாவட்ட செயலாளருமான மாண்புமிகு மனோ தங்கராஜ் அவர்களுக்கும் நன்றி. அயலக அணி அமைந்த நாளிலிருந்து எங்களை அன்போடும் உற்சாகத்தோடும் வழி நடத்தி வருகிறவரும் பகுதி தோறும் அணி அமைப்பாளர்களை அறிவித்து வழிகாட்டும் மாநில வெளிநாடு வாழ் நல அணி செயலாளர் மரியாதைக்குரிய எம்.எம்.அப்துல்லா அவர்களுக்கும், அணி தலைவர் கலாநிதி வீராசாமி M. P. அவர்களுக்கும், மாநிலத் துணை அமைப்பாளர்கள் புகழ்காந்தி, குமரி பாபு மற்றும் அனைத்து மாநில துணை அமைப்பாளர்களுக்கும்,

ஒன்றியச் செயலாளர்கள், டி.பி.ராஜன், பி. கோபால், அருளானந்த ஜார்ஜ், ஜான்சன் மாஸ்டர் பி.மோகன், டி.எஸ். ராஜேஷ் குமார், ராபி, ஆர்.எல். சைனி கார்ட்டன், ஜி.ஜான் பிரைட், நகரச் செயலாளர்கள் எச்.வினுகுமார், ரபீஸ் சுபிஹான், ரமேஷ், பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அயலக அணி தலைவர் ஹாருண் றஸிது (நசீர்), துணைத்தலைவர் சுனிதா சத்யராஜ், துணை அமைப்பாளர்கள், ஆர். ரவி, கவாஸ்கர், ஜாண்கிளின், கிஷோர் குமார், கீல்டா மோகன்தாஸ் மற்றும் கழகக் கிளை செயலாளர் அனைவருக்கும் நன்றி.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி கும்மிடிப்பூண்டி ஒன்றியத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட முன்னாள் மாவட்ட செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினரும், கும்மிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ. கோவிந்தராஜன் கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் ஏ.வி.ராமமூர்த்தி, வி பி..ரவிக்குமார், ஜெ. மூர்த்தி, ஜெ.மோகன்பாபு. க.சம்பத் கே.வி ஆனந்தகுமார். எஸ்.ரமேஷ் டி.சங்கர். என்.கிருஷ்ணமூர்த்தி, கே.ஜி.நமச்சிவாயம், கே.இ.திருமலை கே.எஸ்.சதீஷ்குமார், மோ.பிரசாத், எம்.அருள், எஸ்.உதயகுமார். மு.கேசவன், டிரவி, டில்லி சங்கர், யுகேந்திரன், பா.பரத்குமார். சீனிவாசன், முனுசாமி சண்முகம், ஜெயலலிதாசசிதரன், வடிவேல், அப்புன், ராஜா, கே.வி.நாகராஜ், சசி, ப.சுரேஷ். சிவசங்கர். டி.மோகன், பார்த்திபன். ஆனந்தராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## சென்னை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அதிகாலையில் கனமழை!

# அரசின் துரித நடவடிக்கையால், சென்னை இயல்பு நிலைக்குத் திரும்பியது!

## மழைநீர் உடனுக்குடன் வெளியேற்றப்பட்டது!

சென்னை, ஆக.23-

சென்னையில் நேற்று அதிகாலையில் கனமழை பெய்த போதிலும், அரசு மேற்கொண்ட துரித நடவடிக்கையால், சில மணி நேரங்களில் இயல்பு நிலைக்கு திரும்பியது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று அதிகாலை முதல் இடி மின்னலுடன் கனமழை கொட்டித் தீர்த்தது.

நுங்கம்பாக்கம், ராயப்பேட்டை, பட்டினப்பாக்கம் தியாகராயநகர், சைதாப்பேட்டை, குரோம்பேட்டை, பல்லாவரம், தாம்பரம் உள்ளிட்ட பகுதிகளில் 3 மணி நேரம் கனமழை கொட்டியது.

குறிப்பாக, சென்னை துரைப்பாக்கம் மற்றும் அடையார் பகுதிகளில் அதிகபட்சமாக 10 செ.மீ மழை பதிவாகியுள்ளது. இதனிடையே, கனமழை காரணமாக சென்னை நகரின் பல பகுதிகளில் மழைநீர் தேங்கினாலும், அரசு மேற்கொண்ட துரித நடவடிக்கையால், சென்னை இயல்பு நிலைக்கு திரும்பியது.

சென்னை மாநகராட்சியின் மழைநீர் வடிகால் பணிகளால் சில மணி நேரங்களிலேயே சென்னை இயல்பு நிலைக்குத் திரும்பியதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

**21 சுரங்கப்பாதை களிலும் வழக்கமான போக்குவரத்து!**

சென்னையில் 11 செண்டி மீட்டர் மழை கொட்டித்தீர்த்த நிலையிலும், 21 சுரங்கப்பாதைகளில் தண்ணீர் தேங்கவில்லை. மழைநீர் உடனுக்குடன் வெளியேற்றப்பட்டதால், சுரங்கப்பாதைகளில் போக்குவரத்து சீராக நடைபெற்றது.

*வேரோடு சாய்ந்த மரம்!*

இதனிடையே, கனமழையின்போது பலத்த காற்றும் வீசியதால், சென்னை மந்தை வெளி 2-வது டிரஸ்ட் பிரதான சாலையில் மரம் ஒன்று வேரோடு சாய்ந்தது. மாநகராட்சி மற்றும் தீயணைப்பு துறை வீரர்கள், மரத்தை வெட்டி அப்புறப்படுத்தினர்.



எழும்பூர் வடக்கு பகுதி தி.மு.க.சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனைப்படி பகுதி செயலாளர் சொ.வேலு எம்.சி முன்னிலையில் தொகுதி பொறுப்பாளர் டாக்டர்.ப.நீ.யாழினி 300 பேருக்கு அறுசுவை உணவு வழங்கினார். நிகழ்ச்சி ஏற்பாடடினை தொழிலாளர் அணி பகுதி அமைப்பாளர் ஆர்.ராஜ்குமார் செய்திருந்தார்.உடன் வட்ட கழக செயலாளர் ந.பாலு மற்றும் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.




122–வது வட்டம் சார்பில் நடைபெற்ற ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர்கள் சேர்த்தற்கு நன்றி தெரிவித்தல் மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து நடைபெற்ற வட்ட கழக நிர்வாகிகள் – வட்ட செயற்குழுக் கூட்டம் வட்டச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தொகுதி பார்வையாளர் தகவல் தொழில் நுட்ப அணி மாநில ஆலோசகர் கோ.வி. லெனின், மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., மாவட்ட துணை செயலாளர் நந்தனம் வேதா, பார்வையாளர்கள் ராஜேஷ் கண்ணா, வி.செங்குட்டுவன், எம்.பிரபாகரன், மாவட்ட பிரிதிநிதிகள் வேன் ஆர்.சிவா, பகுதி அவைத்தலைவர் ஜி.ஆர்.ராஜேந்திரன், பகுதி துணை செயலாளர்கள் ப.பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநாதன், வட்ட நிர்வாகிகள் இ.கே.மதி, டிங்கர் கே.பாலு, ஏ.அலமேலு, ஜி.என்.கணேசன், பி.என். செந்தில் குமார், ஏ.அருள் முருகன், சி.பாபு, கி.தமிழ்ச்செல்வன், டி.அருள்சாமி. மற்றும் 122வது வட்டத்திற்குட்பட்ட பகுதி, வட்ட கழகத்தை சார்ந்த அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், பாக தகவல் தொழில்நுட்ப அணி(BDA) மற்றும் பாக இளைஞர் அணி தோழர்கள் கலந்து கொண்டனர்.




தூய்மைப் பணியாளர்களுக்கு

6 அம்ச திட்டங்களை நிறைவேற்றி தந்த

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும்

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும்

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும்

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும்

தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவைக்கும்

நன்றி ! நன்றி ! நன்றி !

G.சத்தியகுமார்
மாநில பொதுச் செயலாளர்

D.கன்னியப்பன்
மாநில பொருளாளர்

சென்னை மாநகராட்சி தொ.மு.ச

தமிழ்நாடு அனைத்து மாநகராட்சி பொது ஊழியர்கள் முன்னேற்றச் சங்கம்

தூய்மைப் பணியாளர்கள் நலன் காக்கும் திராவிட மாடல் அரசு

- **காலை உணவு**
  தூய்மைப் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு சென்னை மாநகராட்சி மூலம் காலை உணவு வழங்கப்படும்.
- **குடியிருப்புகள்**
  தூய்மைப் பணியாளர் நலவாரியம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மூலம் 30,000 வீடுகள்-குடியிருப்புகள்
- **நலன் காக்கும் திட்டம்**
  தூய்மைப் பணியாளர்களின் தொழில்சார் நோய்களை கண்டறிய, சிகிச்சை அளிக்க தனித்திட்டம்
- **சுயதொழில் உதவி**
  தூய்மைப் பணியாளர் நலவாரிய உறுப்பினர்களின் குடும்பத்தினர் சுயதொழில் தொடங்க, ரூ.3 இலட்சம் வரை மானியம் 6% வட்டி மானியம்.
- **உயர்கல்வி உதவித் தொகை**
  தூய்மைப் பணியாளர் வீட்டு மாணவர்களின் கல்வி நலன் கருதி, 7.5% இடஒதுக்கீட்டின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகை வழங்கப்படும்.
- **தூய்மை பணியாளர்கள் பணியின் போது இறந்தால் ரூ.10 இலட்சம் நிவாரண நிதி**
  தூய்மைப் பணியாளர்கள் பணியின் போது இறந்தால் நலவாரிய நிதியுடன் மேலும் ரூ.5 லட்ச ரூபாய் சேர்த்து ரூ.10 இலட்சம் நிவாரண நிதியாக வழங்கப்படும்.